**ஹொரணை பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 26 ஆந் திகதியும் திருத்தஞ் செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2019 யூலை 22 ஆந் திகதியும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந்நிதி கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 யூலை 26 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவக் கணக்காய்வுத் அறிக்கை 2019 செப்டம்பர் 23 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹொரணை பிரதேச சபையின் 2018 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் மூலதனச் சொத்துக் கொள்வனவுச் செலவினமாகிய ரூபா 2,801,506 மீண்டுவரும் செலவினமாகக் காட்டப்பட்டிருந்தது. | மூலதன மற்றும் செலவினங்கள் வகைப்படுத்தப்பட்டு கணக்கில் காட்டப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கருதப்படும். |
| (ii) | மீளாய்வாண்டின் ஏனைய வருமானமாகிய ரூபா 213,789 நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | வருமான, செலவினக் கணக்கில் ஆண்டிற்கான வருவாய் சரியாகக் காட்டப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கருதப்படும். |
| (iii) | பட்டோலை பொருள் கணக்கின் ஆரம்ப மீதியாகிய ரூபா 105,274 மூலதனப் பயன்பாட்டிற்கான வருமானப் பங்களிப்புக் கணக்கில் மாற்றமாகக் குறிப்பிட்டு திரண்ட நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டும் மூலதன பயன்பாட்டிற்கான வருவாய் பங்களிப்புக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிடுமிருந்தால் அந்த இரண்டு கணக்குகளதும் இறுதி மீதிகள் தவறாகியிருந்தன. | சரிவரக் கணக்கிலிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (vi) | மீளாய்வாண்டின் வழங்கல் மற்றும் உபகரணச் செலவினமான ரூபா 48,000 குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | ஆண்டிற்கான செலவினம் சரிவரக் கணக்கிலிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (v) | மீளாய்வாண்டின் பொதுக் களஞ்சிய மீதி ரூபா 163,299 அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | குறித்த செலவினம் சரிவரக் கணக்கிலிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**(ஆ) கணக்கிணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 1032,100,648 தொகை 03 கணக்கு மீதிகளுக்குரியதாகும். இம்மீதியானது அவற்றிற்குரிய பட்டோலை மீதிகளுடன் ரூபா 33,809,354 வேறுபட்டது. | குறித்த மீதிகளது வேறுபாட்டை இணக்கம் செய்து திருத்தம் செய்ய வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் இணக்கமின்மை கண்டறியப்பட்டு பட்டோலை வழங்கப்படும். |

**(இ) பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2002 முதல் 2012 வரை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 2,084,385 பெறுமதி சேர் வரி மீளாய்வாண்டு இறுதியிலும் செலுத்தப்படாதிருந்தது. | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு விரைந்து செலுத்த வேண்டும். | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. |

**(ஈ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடு, கையிருப்புப் பதிவேடு, பட்டோலை என்பன இன்மையால் ரூபா 128,898,345 கூட்டுத்தொகையுடைய 06 கணக்கீட்டு விடயங்களை கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை. | நிதிக்கூற்று மீதியை உறுதி செய்யும் சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பட்டோலையும் தயாரிக்கப்படும். |

## 1.4 இணங்காமை

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் | | | | |
| (i) | 134(1) ஆம் பிரிவு | - | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களாக பிரதேச சபை அறிவித்துள்ள இடங்களில் உள்ள சொத்துக்கள் புதிய வரி மதிப்பீட்டுக்குள்ளாக வேண்டும். | அதிகாரச் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் புதிய மதிப்பீடு மேற்கொள்ளப்படும். |
| (ii) | 160 ஆம் பிரிவு | 2,819,581 | தீர்வை நிலுவையை அறவிடுவதற்கான கடைசி முயற்சியாக சொத்துத் தடை விதிக்கப்படவில்லை. | அதிகாரச் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | சொத்துத் தடை நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது. |
| (ஆ) | 1988 பிரதேச சபைகள் (நிதியும் நிர்வாகமும்) 218 ஆம் விதி | - | சபையின் சகல காணியும் கட்டிடங்களும் ஆண்டிற்கு ஒரு முறையேனும் பரிசீலிக்கப்படவில்லை. | விதிக்கமைய நடவடிக்கை எடக்கப்பட வேண்டும். | விதிக்கமைய நடவடிக்கை எடுக்கப்படாமை ஏற்றுக் கொள்ளப் படுகின்றது. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணத்தின் 57(1)(2) ஆம் பந்தி | 102,932 | ஒவ்வொரு அரையாண்டிலும் காலங்கடந்த சகல வைப்புக்களும் தொடர்பான நிரல் தயாரிக்கப்பட்டு காலங்கடந்த வைப்புக்கள் அரச வருவாயிலிடப் படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருவாயிலிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 28,909,159 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 4,900,792 ஆகும்.

## 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் வருவாய் நிலுவை

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | தீர்ப்பனவும் வரியும் | 16,486,494 | 11,769,297 | 15,885,487 | 2,842,981 | 15,528,874 | 13,102,390 | 13,939,952 | 3745,463 |
| (ii) | வாடகை | 4,263,000 | 2,388,532 | 1,747,744 | 201,700 | 3,682,200 | 2,008,955 | 1,744,811 | 264,139 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,613,500 | 1,219,626 | 1,656,638 | - | 1,096,625 | 907,339 | 871,338 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 85,531,100 | 65,000,000 | 107,531,597 | 40,603,906 | 106,900,400 | - | 58,474,413 | - |

### 2.2.2 தீர்வையும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் ஆரம்பத்திலான தீர்வை நிலுவை ரூபா 3,479,501 ஆகும். அதில் ரூபா 1,305,642 அல்லது 37 சதவீதம் 2019 யூன் 20 ஆந் திகதியன்றும் அறவிடப்படாதிருந்தது. | தீர்வை நிலுவை துரிதமாக அறவிடப்பட வேண்டும். | தீர்வை வருவாய் நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட தீர்வை நிலுவை ரூபா 825,593 ஆகும். இந்த மொத்த தீர்வை வரி நிலுவையின் 29 சதவீதமாகும். | தீர்வை நிலுவை துரிதமாக அறவிடப்பட வேண்டும். | தீர்வை வருவாய் நிலுவையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 விநோத வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் பட்டியலிடப்பட்ட விநோதவரி ரூபா 513,574 ஆகும். ஆண்டின் போது அதில் 321,131 அல்லது 62 சதவீதம் அறவிடப்படாதிருந்தது. எவ்வாறாயினும், 2019 மே 13 ஆந் திகதியளவில் நிலுவை மீதி ரூபா 256,891 ஆகவிருந்தது. | வருவாய் நிலுவை துரிதமாக அறவிடப்பட வேண்டும். | நிலுவையை 10 ஆம் தவணைப் பணமாக அறவிட பொதுச்சபை தீர்மானித்தது. |

### 2.2.4 வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வியாபார அனுமதிப் பத்திரத்தை விநியோகிப்பதற்கு முன் சுகாதார மருத்துவ உத்தியோகத்தரின் சிபாரிசு பெறப்பட வேண்டிய 06 வியாபார நிலையங்களுக்காக சிபாரிசு பெறப்படாமல் வியாபார அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்டுள்ளது. | சுகாதார மருத்துவ உத்தியோகத்தரின் சிபாரிசு பெறப்பட வேண்டிய வியாபார நிலையங்களுக்காக சிபாரிசு பெறப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது சுகாதார மருத்துவ உத்தியோகத்தரின் சிபாரிசை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் தலைமைச் செயலாளரிடமிருந்து 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 30,000,000 ஆகும். முத்திரைக் கட்ணடம் ரூபா 39,270,556 ஆகும். | நிலுவையாக வுள்ள நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும் துரிதமாக அறவிடப்பட வேண்டும். | முத்திரைக் கட்டண நிலுவையை பெறவும் நீதிமன்றத் தண்டப்பணத்தை பெற்றுக் கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 16 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் ஆக்கப்பட வேண்டுமாயினும் 2018 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் 04 பணிகளுக்கு மாத்திரமே உப விதிகள் ஆக்கப்பட்டிருந்தன. | தேவையான உப விதிகள் ஆக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2918 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்திலும் காணப்பட்ட ரூபா 3,150,000 கிரயமுடைய 07 செயற்திட்டங்கள் அமுலாகவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி செயற்திட்டம் அமுலாக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி சரிவர பணிகள் மேற்கொள்ளப்படும். |
| (ii) | 2018 ஆம் ஆண்டில் ரூபா 18.9 மில்லியன் செலவில் சபை 20 வீதிகளை அபிவிருத்தி செய்திருந்த போதும், அவை செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இனங்காணப்பட்ட செயற்திட்டங்கள் என்பது உறுதியாகவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டம் சரிவர தயாரிக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் நிர்வாகக் காலத்தில் தயாரிக்கப்பட்டது. அது அமுல்படுத்தப்பட்ட பொதுமக்களது பிரதிநிதிகளது நிர்வாகக் காலத்திலாகும். இதனால் பிரதிநிதிகளின் முன்மொழிதல்களின் பிரகாரம் செயற்திட்டம் அமுலாகியது. |

**(இ) வேலை நிறைவேறுவதில் தாமதம்**

| | | |
|---|---|---|
| வகவத்த கழிவுப்பொருள் பிரிவை நிர்மாணிப்பதற்கு ரூபா 5,755,986 கிரய மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2018 சனவரி 18 ஆந் திகதி முடிவடையும் எனத் திட்டமிடப்பட்ட போதும், 2019 சனவரி 31 ஆந் திகதியளவிலும் முடியவில்லை. | செயற்திட்டம் தாமதமின்றி அமுலாக்கப்பட வேண்டும். | தாமதக் காலத்திற்கு தாமதக் கட்டணம் அறவிடப்படும். |

**(ஈ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| | | |
|---|---|---|
| திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கென 2018 ஆம் ஆண்டில் சபை ரூபா 34,361,719 செலவழிக்கப்பட்டிருந்தது. கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கு உப விதிகள் தயாரிக்கப்படவில்லை. கழிவுப் பொருள் வரியின் மூலம் செலவைக் குறைப்பதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | கழிவுப் பொருள் முகாமைத்துவச் செலவைக் குறைக்க வேண்டும். உப விதிகள் தயாரிக்கப்பட வேண்டும். | உப விதிகள் தயாரிக்கப்படவும் வரி அறவிடப்படவுள்ளது. |

**(உ) நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி இலக்கு**

| | | | |
|---|---|---|---|
| (i) | நிதி மற்றும் ஊடக அமைச்சின் 2017 யூலை 25 ஆந் திகதிய 2/2017 ஆம் இலக்க வரவு, செலவுத்திட்டச் சுற்றறிக்கையின் 6.1 ஆம் பிரிவின் பிரகாரம் வறுமை குறைப்பிற்கான 2018 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித்திட்டம் அமுலாகவில்லை. | நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கம் மற்றும் இலக்கு நிறைவேற்றப்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டில் வறுமைக் குறைப்பிற்கு ஒரு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | தேசிய வரவு, செலவுத் திட்ட திணைக்களத்தின் 2017 யூலை 31 ஆந் திகதிய BD/CBP/4/1/2-2018 சுற்றறிக்கையின் பிரகாரம் வரவு, செலவு திட்ட மதிப்பீட்டைத் தயாரிக்கும் போது சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட 3 உபாய மார்க்கங்கள் தொடர்பாக உத்தியோகத்தர் அறிந்திருக்கவில்லை. நிலைத்து நிற்கவல்ல நோக்கங்களையும் இலக்குகளையும் குறிக்கும் தரவுகளைச் சேகரிப்பதற்கு உத்தியோகத்தர்கள் பயன்படுத்தப்படவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிறுவனத் தலைவரும் பதவியணியினரும் அறிந்திராமை மற்றும் வெற்றிடங்கள் காரணமாக அதற்கென உத்தியோகத்தர்களைப் பயன்படுத்த முடியவில்லை. |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

(அ) பதவியணி வெற்றிடங்களும் மிகையும்

| | | | |
|---|---|---|---|
| (i) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 09 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் உள்ளன. உள்ளவாறு 08 உத்தியோகத்தர்களே இருப்பதால் 01 வெற்றிடம் நிலவியது. | வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும். | உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு வெற்றிடம் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ii) | இரண்டாம் நிலை பதவிகள் 06 மற்றும் மூன்றாம் நிலைப் பதவிகள் 11 என்பன வெற்றிடங்களாக இருந்தன. | வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஆட்சேர்க்கப்பட வேண்டும். |
| (iii) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் போதிய எண்ணிக்கையிலானோர் உள்ள 03 பதவிகளுக்கு 12 பதலீட்டு ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டு ஆண்டின் போது ரூபா 6,947,341 சம்பளம் வழங்கப்பட்டிருந்தது. | பதிலீட்டுப் பதவியணியினர் குறைக்கப்பட வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் பற்றாக்குறை உள்ளது. |

**3.3 இனங்காணப்பட்ட இழப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கனன்வில உப அலுவலகத்தில் ரூபா 243,277 கிரயமுடைய 15.35 தார்ப்பீப்பாக்கள் குறைவாக இருந்தன. | குறைவை இனங்கண்டு பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டும். | ஆரம்ப விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பணம் அறவிடப்படும் |

### 3.4 வாகனக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையில் 15 வாகனங்களுக்கு வருமான அனுமதிப்பத்திரம் பெறப்படவில்லை. | சகல வாகனங்களுக்கும் வருமான அனுமதிப்பத்திரங்கள் பெறப்பட வேண்டும். | வாகன அனுமதிப்பத்திரங்களை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5 பொருட் கொள்வனவு

### 3.5.1 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மில்லேவ ஒவிலான வீதி நிர்மாண வேலைக்குக் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 462,503 பெறுமதியான முன் பொருட்கைள அளவிட்டு உறுதிப்படுத்தல் பெறப்படவில்லை. மேலும் மூலப்பொருட்கள் பெறப்பட்டு 1½ மாதங்களுக்கு அதிகமாக பாதுகாப்பின்றி சபை வேலை ஆரம்பிக்கப்படாத நிலையில் இருந்தன. | வீதி நிர்மாணப் வேலைகளுக்குப் பெறப்படும் மூலப்பொருட்கள் வழங்குநரால் வழங்கப்படுகையில் அறவிடப்பட வேண்டும். | ஆண்டின் இறுதியில் மாகாண சபைகள் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட பல யெற்திட்டங்கள் நடைபெற்றதால் தாமதமாகியது. |
| (ஆ) | களஞ்சியக் கையிருப்புப் புத்தகங்களில் வழங்கற் கட்டளை இல்லாது ரூபா 507,200 பெறுமதியான 32 தார்ப்பீப்பாக்கள் வழங்கப்பட்டிருந்தன. | பொருட்கள் வழங்கற் கட்டளை இன்றி வழங்கப்படலாகாது. | தவறுதலாக வழங்கற் கட்டளையின்றி விநியோகிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | சபை தார் பூசி அபிவிருத்தி செய்த 03 வீதிகளுக்கு வழங்கப்பட்டு ரூபா 95,520 பெறுமதியான 08 தார் பீப்பாக்கள் வழங்கப்படாததால் வீதி குறைந்த தரத்திலிருந்தது. | வீதி அபிவிருத்திக்கான மதிப்பீட்டின் மூலம் கோரப்படும் பொருட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். | மதிப்பிடப்பட்ட பொருட்கள் பயன்படுத்தப்பட்டன. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 தீர்வு செய்யப்படாத கணக்காய்வு அவதானிப்புக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் 2.2.4(இ) பந்தி | பொறுப்பானவர்களிட மிருந்து அறவிடப்பட வேண்டும். | பொறுப்பானவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் 2.2 (ஈ) பந்தி | கணக்கீட்டுக் குழுவின் கட்டளை அறவிடப்பட வேண்டும். | 2017 கணக்கீட்டுக் குழுக் கட்டளை பொறுப்பானவர்களிடமிருந்து அறவிடுமாறு கோரியுள்ளது. |